மாலை முரசு

பக்கங்கள் 15+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 24 வியாழக்கிழமை 08.01.2026 | அதிர்வு 162

## 'டித்வா' பேரழிவு: நாளை முதல் புதிய வீடுகள்

இலங்கையில் டித்வா சூறாவளியால் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் நாளை 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# 7 மாவட்டங்களுக்கு வெள்ள அபாயம்!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு வெள்ளப் பெருக்கு தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக் களப்பு, பொலனறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நீர்நிலைகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படக்கூடும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் 04



# ஹரிணிக்கு எதிரான பிரேரணையில் 50 இற்கும் மேற்பட்டோர் கையொப்பம்

## நாளை சபாநாயகரிடம் கையளிக்கத் தீர்மானம்



கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை யில், இதுவரை எதிர்க்கட்சியைச் சேர்ந்த சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அதில் மேலும் பல உறுப்பினர்கள் கையொப் பமிடவுள்ளனர் என்றும் ஊடகங்களிடம் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று நாடாளுமன்றத் 04

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் இந்திய இராணுவத் தளபதி பேச்சு

## பாதுகாப்பு உறவு குறித்து ஆராய்வு

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்ர திவ்வெதி, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜய சேகரவை (ஓய்வு) கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்திய இராணுவத் தளபதி நேற்று இலங்கை வந்தார். ஜெனரல் திவ்வெதியைபிரதி அமைச்சர், அன்புடன் வரவேற் றதுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று, கலாச்சார மற்றும் நாகரிக உறவுகளை இரு 04





# கல்வி அமைச்சர் பதவி துறந்து செல்லும்வரை அமைச்சை முற்றுகையிட்டிருக்க வேண்டும்!

## இப்படிச் சொல்கின்றார் விமல் வீரவன்ச

"நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தால் மாத்திரம் போதாது. பதவியைத் துறந்து வெளியேறும் வரை கல்வி அமைச்சை சுற்றிவளைத்திருக்க வேண்டும். மாணவர்களின் கல்வியுடன் விளையாடுவதற்கு மீண்டுமொருமுறை எவருக்கும் இடமளிக்கக் கூடாது."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைக் கூறிய அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"நாட்டில் கல்விச் மறுசீரமைப்பை மேற்கொள்வதென்பது விளையாட்டல்ல. இது மிகவும் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். கல்வி மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுவது எமது பிரச்சினையல்ல.

ஆனால் அவை நாட்டுக்குப் பொறுத்தமானவையாக இருக்க வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெறும் 200 மில்லியன் டொலர் மீது கொண்டுள்ள ஆசையால் மாணவர்களின் எதிர்காலத்தை பலியாக்குவதற்கு இடமளிக்க முடியாது.

மிகவும் சூட்சுமமாக 6ஆம் தர மாணவர்களுக்கான பாடப் பரப்பில் பொறுத்தமற்ற இணையதளமொன்றின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமின்றி இந்தப் பாடத் தொகுதியில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட பிழைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றைத் தயாரிப்பதற்கான ஆலோசகர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர்? அவர்களுக்கு எவ்வளவு கொடுப்பனவு வழங்கப்பட்டது? இந்தக் காரணிகளைக் கல்வி அமைச்சு அல்லது அரசு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்.

இந்தக் கல்வி மறுசீரமைப்புக்களுக்கு வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறினாலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி கிடைக்கின்றது என்பதை நாம் ஏற்கனவே நாட்டுக்கு வெளிப்படுத்தியிருக்கின்றோம். எந்தக் கொள்கையைப் பரப்புவதற்காக இவ்வாறு நிதி உதவியளிக்கப்பட்டது என்பதையும் நாம் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இந்தச் சிறிய ஒரு தொகைக்காக எதிர்கால சந்ததியினர் பலியாக்கப்படுகின்றனரா? இதற்காகவா தேசிய மக்கள் சக்தி அரசுக்கு மக்கள் ஆணையை வழங்கினர்?

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனை வழிகாட்டல் நூல்களில் இந்த விடயம் உள்ளடக்கப்படவில்லை. கல்வி நிபுணர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக்களை உதாசீனப்படுத்தியே இவை பாடப்பரப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தால் மாத்திரம் போதாது.

பதவியைத் துறந்து வெளியேறும் வரை கல்வி அமைச்சைச் சுற்றி வளைத்திருக்க வேண்டும். மாணவர்களின் கல்வியுடன் விளையாடுவதற்கு மீண்டுமொருமுறை எவருக்கும் இடமளிக்கக் கூடாது." – என்றார்.

# அதிவேகமாக வந்த கார் மோதி 11 வயது சிறுவன் பரிதாபப் பலி!

கோர விபத்தில் 11 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் குருநாகல், கல்கமுவை பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவன் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்றபோது அதிவேகமாக வந்த கார் அவர் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் உடனே கல்கமுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவர் அங்கு வருவதற்கு முன்னர் உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், காரின் சாரதியான 27 வயது இளைஞரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கஜேந்திரகுமாரின் ஆசனத்தை வேறு இடத்துக்கு மாற்றுங்கள்!

## சபாநாயகரிடம் அர்ச்சுனா வேண்டுகோள்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒழுக்கமற்ற வகையில் பேசினார்˙ அவரின் பக்கம் அமரமுடியாது – சபாநாயகரிடம் முறையிட்ட அர்ச்சுனா

“நாடாளுமன்றத்தில் எனக்குப் பக்கத்தில் வலது பக்கமாக அமர்ந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் ஆசனத்தை வேறு இடத்துக்கு மாற்றுங்கள். இல்லையேல் தொடர்ந்தும் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு என்னால் பொறுப்புக் கூற முடியாது. ஒழுக்கமற்ற வகையில் பேசும் அவருக்குப் பக்கத்தில் என்னால் அமரமுடியாது.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது சக உறுப்பினர் ஒருவர் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் தகாத மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்களை செய்துள்ளமை தொடர்பான முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கின்றேன்.




இதன்படி கடந்த டிசம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தவறாக வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தி ஒருமையில் மிகக் கேவலமாகவும், பொதுமக்களால் கேட்க முடியாதவாறு வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தி என்னை இழிவாகப் பேசினார்.

நாடாளுமன்றத்தில் அவருக்கு அருகில் எனது ஆசனம் இருப்பது தொடர்பிலும் பேசினார். இது நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்பும் வகையில் அமைந்துள்ளது .

இதனால் இன்றில் இருந்து எனது ஆசனத்துக்கு வலது பக்கத்தில் அமைந்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் ஆசனத்தை வேறு இடத்துக்கு மாற்றுங்கள். தொடர்ந்தும் இவர் எனது வலது பக்கத்தில் இருப்பதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்புக்கூற முடியாது.

இதேவேளை, நாடாளுமன்றச் சிறப்புரிமை தொடர்பான ஒழுக்காற்றுக் குழுவில் அங்கம் வகிப்பதற்குக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தகுதியற்றவர். இதனால் அந்தக் குழுவில் இருந்தும் அவரை நீக்கவும் சபாநாயகரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.” – என்றார்.

# இருவேறு விபத்துக்களில் இருவர் பரிதாப மரணம்!

இருவேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மாவனெல்லை பிரதேசத்தில் கொழும்பு – கண்டி பிரதான வீதியில், கொந்தெனிய சந்திக்கு அருகில், இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கேகாலையில் இருந்து மாவனெல்லை நோக்கிப் பயணித்த வான் ஒன்று, மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முயன்றபோது, எதிர்த் திசையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் வான் சாரதி, அவரது மனைவி மற்றும் பஸ் சாரதி ஆகியோர் காயமடைந்து, மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், வான் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.




உயிரிழந்தவர் கடுகன்னாவை பகுதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொழும்பு – தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேஸ்லைன் வீதியின் கீழ் தெமட்டகொடை மேம்பாலத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெமட்டகொடை சந்தியிலிருந்து இங்கம் சந்தி நோக்கிப் பயணித்த கொள்கலன் லொறி ஒன்று பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் உஹன பகுதியை சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக,

"திருவாசகம் என்னும் தேன் " என்னும் ஆன்மீக அருளுரையை சித்த மருத்துவத்துறை மருத்தாளர் த.தவநேசன் நிகழ்த்தவுள்ளார். நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் இந்த நிகழ்வு இடம்பெறும்.

---

## 7 மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வெள்ளம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளனர்.

ஏதேனும் அனர்த்த நிலை ஏற்படுமாயின் 117 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அறியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

## பிரதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினரும் நினைவுபடுத்தினர்.

அண்மையில் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது இந்திய அரசு அளித்த கணிசமான மற்றும் பன்முக ஆதரவுக்காக இலங்கை ஜனாதிபதி மற்றும் மக்களின் சார்பாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

அனர்த்த நிவாரணக் குழுக்கள் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட இந்தியாவின் உரிய நேரத்தினாலான ஆதரவு நாட்டின் மீட்பு மற்றும் நிவாரணம் முயற்சிகளில் முக்கிய பங்கு வகித்தது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் குழுக்கள் தொடர்ந்தும் நிவாரணம் மற்றும் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து வருகின்றன. கடல் பிராந்தியத்தில் போதைப்பொருள் மற்றும் பிற நாடுகடந்த குற்றங்களை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்த வழிவகுத்த இந்திய பாதுகாப்புப் படைகளுடனான செயற்பாட்டு ஒத்துழைப்புக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

மேம்பட்ட தொழில்நுட்பம், திறன் மேம்பாடு மற்றும் அறிவுசார் பகிர்வு முயற்சிகள் மற்றும் எதிர்கால பாதுகாப்பு ஒத்துழைப்பு முயற்சிகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தை எதிர்கொள்வதில் இலங்கை அரசாங்கமும் மக்களும் காட்டிய வலுவான தேசிய ஒற்றுமை மற்றும் மீள்தன்மையைப் ஜெனரல் திவ்வெதி பாராட்டினார்.

இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை துறைகளில் இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான இந்தியாவின் வலுவான உறுதிப்பாட்டை ஜெனரல் திவ்வெதி மீண்டும் உறுதிப்படுத்தினார்.

மனிதாபிமான உதவி, அனர்த்த மீட்பு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு முயற்சிகளில் தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், பிராந்திய ஸ்திரத்தன்மை, மீள்தன்மை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இந்தியாவின் தயார்நிலையை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே நீடித்த நம்பிக்கை மற்றும் வெளிப்படைத்தன்மையை உருவாக்க இளைய, நடுத்தர மற்றும் சிரேஷ்ட தலைமைத்துவங்கள் மூலம் அனைத்து மட்டங்களிலும் மக்களுக்கிடையிலான பிணைப்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், அவசர சூழ்நிலைகளின் போது பொதுவான புரிதலை வளர்ப்பதற்காக, தேசிய அளவில் இருந்து தந்திரோபாய நிலை வரை அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை மேம்படுத்த கூட்டு பயிற்சி மற்றும் பரிமாற்ற திட்டங்களின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீடித்த நட்பு மற்றும் கூட்டாண்மையை உறுதிப்படுத்துவதாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இது பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்திய இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், கொழும்பிலுள்ள பாதுகாப்பு ஆலோசகர் உட்பட இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகின்றது.

ரீ பில்டிங் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் இதற்குரிய நடவடிக்கை இடம்பெறும்.

இதற்கமைய டித்வா சூறாவளியால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் இழப்பீடு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நாளை இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் மாவட்டங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

அனுராதபுரம் மாவட்டத்தில் கல்னேவ, ஹந்துன்கம, ராஜாங்கனய மற்றும் சிறி மாபுர ஆகிய பகுதிகளில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் நிகவெரட்டிய, விதிகுலிய சந்தி, ரிதீகம மற்றும் தொடம்கஸ்லந்த ஆகிய பகுதிகளில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஹரிணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்தக் கையொப்பமிடும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இந்தப் பிரேரணை நாளை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசின் கல்விச் சீர்திருத்தங்கள் காரணமாக பிள்ளைகளின் கல்வியில் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாகக் கூறி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது.

தற்போதைய கல்விப் பாடத்திட்ட மாற்றங்கள் மற்றும் நிர்வாகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியே எதிர்க்கட்சிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன என்று எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக மேலும் கூறினார்.




**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மெத்தனப் போக்கு அரசு

அண்மைக் காலப் புயல் தாக்கத்தால் ஏற்பட்ட சேதத்தை புனரமைக்க ஒரு லட்சத்து இருபதாயிரம் கோடி (1,200 பில்லியன்) ரூபா வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இலங்கையை கட்டியெழுப்பும் நிதியத்துக்கு இதுவரையில் ஆக 700 கோடி (7 பில்லியன்) ரூபா வரையான நிதியே கிடைக்கப்பெற்றுள்ளது. காலம் தாழ்த்தாது சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அரசாங்கம் நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியிருக்கின்றார்.

இலங்கைக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது, எனவே, விரைந்து சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துங்கள் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கூட மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இருவருமே நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இந்த வலியுறுத்தலையே வெளியிட்டுள்ளனர்.

“தேசிய நிதியை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏற்பட்ட விளைவுகளில் இருந்து மீள முடியாது. ஆகவே சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த வேண்டும் என்று வலியுத்தினோம். சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அது எப்போது என்று குறிப்பிடவில்லை. உலகில் பிறிதொரு நாட்டில் இயற்கை அனர்த்தங்கள் ஏதும் ஏற்பட்டால் இலங்கை மீதான கவனம் குறைவடையும். ஆகவே இவ்விடயத்தில் விரைவாக செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.” - என்று ஹர்ஷ டி சில்வா வலியுறுத்துகின்றமையில் அர்த்தங்கள் ஆழமாக உள்ளன.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியம் இன்றளவில் சட்டத்தால் நிறுவப்படவில்லை. பல கோடி ரூபா நிதி பரிமாற்றப்படுகிறது. எதிர்காலத்தில் இது பிரச்சினைக்குரியதாக மாறலாம். ஆகவே இந்த நிதியத்தை சட்டத்தால் ஒழுங்குபடுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். அதேபோல் அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த நிவாரண நிதியத்தை ஸ்தாபிக்குமாறும் வலியுறுத்துகிறோம் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார் ஹர்ஷ டி சில்வா.

சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துங்கள் என்று வலியுறுத்தும்போது, அரசு இதில் அலட்சியமாக இருப்பது போலவே தெரிகிறது என்று விசனத்துடன் குறிப்பிடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் .

முன்னைய அரசுகளையும் நிர்வாகங்களையும் குறை சொல்லி அதிகாரத்துக்கு வந்த இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு, தன்னளவில் ஊழல், முறைகேடுகள், நிர்வாகத்தில் தவறுகள் போன்றவற்றை இழைப்பதான குற்றச்சாட்டுக்கள் பெரிய அளவில் எழாவிட்டாலும், இந்த அரசு காத்திரமாகச் செயற்படுகின்றது என்ற நம்பிக்கையைத் தரும் விதத்தில் அதன் போக்கு அமையவில்லை என்பதுதான் உண்மை. பல விவகாரங்களிலும் மெத்தனமாக நடக்கும் இந்த அரசின் செயற்பாடுகள் இறுதியில் நாட்டுக்கு பேரிழப்பைத்தான் தேடித் தரும் என்று தோன்றுகின்றது.




# அக்கரைப்பற்று பாடசாலையில் அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு!

## பெற்றோர் இன்று போராட்டம்

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று கல்வி வலய பதுரியா வித்தியாலய அதிபர் இடமாற்றத்துக்கு எதிராக பாடசாலை பெற்றோர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் மொத்த அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் தற்போதைய அதிபர், அதே பாடசாலையில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என வலியுறுத்திய பெற்றோர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இடமாற்றம் செய்து அனுப்பப்பட்ட சாய்ந்தமருதை சேர்ந்த புதிய அதிபர் பாடசாலைக்கு வரக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்கள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

"மாணவர் நலனுக்கு பாதகம் விளைவிக்கும் இடமாற்றம் வேண்டாம், அர்ப்பணிப்புடன் சேவை செய்யும் அதிபரை நீக்க வேண்டாம்" போன்ற கருத்துப்பட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் போராட்டத்தில் காணப்பட்டன.

தற்போதைய அதிபரின் தலைமையில் பாடசாலையின் கல்வித் தரம் உயர்ந்துள்ளதாகவும், மாணவர் ஒழுக்கம் மற்றும் கூடுதல் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், தூர பிரதேசத்திலிருந்து இங்கு வந்து கடமையாற்றுவது அந்த அதிபருக்கு கஷ்டமான ஒன்றாக இருக்கும் என்பதுடன் பாடசாலையில் முழுமையாக அவரால் அக்கறை செலுத்த முடியாத நிலை இருக்கிறது என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், காரணமற்ற இடமாற்றம் பாடசாலையின் வளர்ச்சியைப் பாதிக்கும் எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு, மாணவர்களின் நலனை முதன்மைப்படுத்தி தீர்வு வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.



# திருகோணமலை கடல் உக்கிர நிலை சிவப்புக் கொடி பறக்க விட்டு எச்சரிக்கை

(எம்.எம்.நௌபீக் - தோப்பூர்)

திருகோணமலை கடற்கரையை அண்டிய கடற்பகுதியில் அலையின் உக்கிரம் காணப்படுவதால் கடலினுள் சுற்றுலாப் பயணிகள் இறங்குவது ஆபத்தானது என்ற நிலையில் கடற்படையினரால் சிவப்புக்கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

கடலலையின் உக்கிரம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின்றி கடற்கரை வெறிச்சோடிக்கிடப்பதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் கரையோரத்திலிருந்த மீன்பிடி படகுகளும் பாதுகாப்பாக ஏற்றிவைக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிந்தது.

# குளங்களின் கீழ்ப் பகுதிகளுக்கான வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு!

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விடுத்தது

(பா.சதீசன்)

யாழ். மாவட்டத்துக்கு வெள்ள அனர்த்தம் விடுக்கப்பட்டுள்ள நிலையில், குளங்களின் கீழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வெள்ள அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு விடுத்துள்ள அந்த அறிவித்தலில்,

முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் மொத்தம் 10 குளங்கள் உள்ளன.

முத்தயங்கட்டு குளம் – பராமரிப்புப் பணிகள் காரணமாக நீர்மட்டம் குறைக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்பு குளம் – வான் கதவு ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளது. மழை நிலவரத்தைப் பொறுத்து திறப்பு மேலும் அதிகரிக்கப்படும்.

மாதவளசிங்கம் குளம், கனுக்கேணிக்குளம், உடையார்கட்டுக்குளம், விசுவமடுக்குளம், மருதமடுக்குளம் – வான்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

தட்டையார்மலை குளம் – வான்பாயும் நிலையில் உள்ளது.

எதிர்பார்க்கப்படும் கனமழை காரணமாக, வான்பாயும் அளவு இன்று முதல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதனால் குளங்களின் கீழ்ப்பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

இது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கான முக்கிய அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகக் கழிவாறுகளுக்கு அண்மையில் மற்றும் தாழ்வான பகுதிகளில் விவசாயம் செய்பவர்கள், இந்த காலகட்டத்தில் நெற்பயிர் நிலங்களுக்கு செல்ல வேண்டாம்.

தவிர்க்க முடியாத காரணங்களால் செல்ல வேண்டியிருந்தால் உயரமான பாதுகாப்பான இடங்களை முன்கூட்டியே அடையாளம் காணுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தது ஒரு வாரத்துக்கான உணவுப் பொருள்களை உடன் எடுத்துச் செல்லுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு காலத்தில் உணவு வழங்கல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் கடினமாகும் என்பதால், பாதுகாப்புக் காரணங்களுக்காக நெற்பயிர் நிலங்களுக்குச் செல்லாமல் இருப்பது மிகவும் அவசியம்.

குறிப்பாகத் தண்ணி முறிப்பு மற்றும் நித்தகைக் குளங்களின் கீழ்ப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தற்போது அனைத்து குளங்களும் பாதுகாப்பான நிலையில் உள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்ச்சியாக நிலவரத்தை கண்காணித்து வருகிறது. இருப்பினும், எதிர்பாராத கனமழை ஏற்பட்டால் திடீர் வெள்ள நிரம்பல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே, பொது மக்கள் அனைவரும் இந்த எச்சரிக்கையை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.– என்றுள்ளது.

# அம்பாறை கடலரிப்புத் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குக!

## ஜனாதிபதி பணிப்புரை விடுப்பு

(கே. எ. ஹமீட் )

ஒலுவில் மீனவர் துறைமுகம், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களில் நிகழ்ந்துள்ள கடலரிப்பு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கும் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற போது ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கருத்துத் தெரிவிக்கையில்,

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால் ஒலுவில், நிந்தவூர் பிரதேசங்களில் உறுதிக் காணிகளில் அமைந்திருந்த தென்னந்தோட்டங்கள் கடலுக்குள் சென்றுள்ளன. இக்காணிச் சொந்தக்காரர்களுக்கு இதுவரையும் எவ்விதமான நஷ்டஈடுகள் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு வெள்ள காலத்திலும் ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு,



சாய்ந்தமருது, கல்முனை மற்றும் மருதமுனை வரை கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது. மாளிகைக்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள முஸ்லிம்களுக்குரிய பொதுமையாவாடி முழுமையாக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது.

எனவே, அம்பாறை மாவட்ட கடலரிப்பு விடயமாக ஜனாதிபதி அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள மீனவர்களுக்கான துறைமுகத்தை திறப்பதற்கு முன் ஒலுவில் கிராமத்தில் கடலரிப்புக்கு பாதுகாப்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

நமது நாட்டின் பெருந்தொகையான நிதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒலுவில் மீனவர்களுக்கான துறைமுகத்தை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் அவர்களுக்கான இயந்திரப் படகுகளைத் தடுத்து வைப்பதற்காக வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம், திருகோணமலை துறைமுகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.– என்று தெரிவித்தார்.

இந்த நிலையல் அம்பாறை மாவட்டத்தில் கடலரிப்புக்கு உள்ளான பிரதேசங்கள் தொடர்பாக அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

ஒலுவில் மீனவர் துறைமுகம் தொடர்பாக மீன்பிடி அமைச்சர் விவரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மீன்பிடி அமைச்சர் சந்திரசேகர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை பெறும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தில் கடல் மண் சேகரிக்கப்பட்டு வருகின்றன.– என்று தெரிவித்தார்.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் அம்பாறை மாவட்ட கடலரிப்பு தொடர்பாக விரைவாக அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் அதன்பின் இது தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்வோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.





# கல்வியால் மட்டுமே சமூகம் முன்னேற்றமடையும்!

## *கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர்*

(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்வியால் மட்டுமே சமூகம் முன்னேற்றமடையும். சேவை செய்ய அரசியல் தேவையில்லை. என் உயிர் வாழும் வரை சமூகத்தின் முன்னேற்றத்துக்காய் பயணிப்பேன்.

இவ்வாறு கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும் லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தின் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு ரஹ்மத் பவுண்டேசனின் கல்வி விசேட வேலைத் திட்டத்தின் கீழ், பாடசாலைக்கு ஸ்மார்ட் போர்ட் கையளித்தல் மற்றும் ஏ.ஆர். மன்சூர் தொழிநுட்ப அறை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிஷாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை தெரிவித்தார் .

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

என்னிடம் ஊர்வாதம் இனவதாம் இல்லை. ஊர்வாதம் இனவதாம் பேசியவர்கள் நன்றாக இருந்ததுமில்லை என்பது உண்மை. நகர்ப்புற பாடாலைகளை விடவும் இந்த பாடசாலை பல சாதனைகளை புரிந்துள்ளது என்பதை பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிஷாத் பேசும் போது குறிப்பிட்டார். இது எல்லோருக்கும் பெருமையாக உள்ளது.



இங்கு வசிக்கும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் கல்வி கற்றுக்கொள்ள சேர்த்துக் கொள்ள முன் வர வேண்டும் மாணவர்கள் கல்வி கற்று எதிர்காலத்தில் நல்ல நிலையில் இருக்க வேண்டும் இங்குள்ள பிள்ளைகள் சமூகத்தின் சொத்து கல்வியின் மூலமே நாம் முன்னேற்றம் அடைய முடியும்.– என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளருமான அஸ்மா அப்துல் மலீக் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டார். பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பிரதேச நலன் விரும்பிகள், பெற்றோர்கள் ரஹ்மத் பவுண்டேசனின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





# புத்தளம் – அநுராதபுரம் வீதியில் விபத்து; நால்வர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்!

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

புத்தளம் அநுராதபுரம் வீதி தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலத்தை கடக்க முயன்ற வான் ஒன்று எதிராக வந்த பஸ்ஸில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்து நேற்று இரவு இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த நால்வர் படுகாயம் ஏற்பட்ட நிலையில்புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.






# இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல் துறைத் தலைவர் சம்மாந்துறைக்கு

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் அரசியல் துறைத் தலைவர் டாம் சோப்பர் சம்மாந்துறைக்கு புதன்கிழமை விஜயம் செய்துள்ளார்.

இதன்போது சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஐ.எல்.எம்.மாஹிஜர அவரது அலுவலகத்தில் சந்தித்து பிரதேச அபிவிருத்தி சமகால அரசியல் நிலைமை மற்றும் அரசுடன் உள்ள ஒத்துழைப்பு தொடர்பாக விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

எதிர்காலத்தில் பிரதேசத்தின் கல்வி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளையும் மேம்படுத்த பிரிட்டிஷ் அரசின் ஒத்துழைப்பு அவசியம் தொடர்பாக தவிசாளர் வலியுறுத்தினார்.

இதன்போது பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயத்தில் அரசியல் ஆலோசகர் இன்ஷாப் பக்கீர் மார்கர் சம்மாந்துறை எம்.ஏ.ஹஸன் அலி உள்ளிட்டோர்களும் கலந்து கொண்டனர்.



# கல்முனையில் டெங்கு அதிகரிப்பு; கட்டுப்படுத்தத் துரித நடவடிக்கை!

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனைப் பிராந்தியத்தில் டெங்குத் தாக்கம் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் கல்முனை மாநகர சபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் ஆலோசனை, வழிகாட்டலில் மருதமுனை பிரதேசத்தில் புதன்கிழமை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது டெங்கு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டன. குப்பைகளும் சேகரித்து அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் வீடுகளில் டெங்கு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.



இதற்கு கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

அடுத்தடுத்த நாள்களில் ஏனைய பிரதேசங்களிலும் பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தெரிவித்தார்.




# மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்குப் பொருள்கள்!

## கையளித்தது ஐக்கிய நாடுகளின் புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் ஒரு தொகுதி பொருள்கள் இன்று வியாழக்கிழமை ஐக்கிய நாடுகளின் புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் ஊடாக (IOM ) கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.எச்.எம்.ஆஸாத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளில் நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு நோயாளர் விடுதிகளில், நோயாளர்கள் பயன்படுத்தும் ஒரு தொகுதி பொருள்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் துணைத் தூதுவர் தலைமை இடப்பெயர்வு சுகாதார அதிகாரி டாக்டர் சிமியோனெட்டி அசிஸ், ஐக்கிய நாடுகளின் புலம் பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் இலங்கை மற்றும் மாலத்தீவுகளின் இடப்பெயர்வு சுகாதார மருத்துவர் ஆர்.எம்.உதீர சரித்ரா ஹறிச்சந்திர ஆகியோர் இணைந்து கையளித்தனர்.

இதன் போது மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட், வைத்தியர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





### சந்நிதியான் ஆச்சிரம உதவி வழங்கும் திட்டத்தில்

# 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் மலையக உறவுகளுக்கு வழங்கல்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மலையகம் பதுளை பகுதிகளைச் சேர்ந்த யூரி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கும், பட்டாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 143 மாணவர்களுக்கும் சுவிஸ் தமிழ்க் கல்விச் சேவை அமைப்பின் நிதிப் பங்களிப்பில்,சந்நிதியான் ஆச்சிரமத்தின் நெறிப்படுத்தலில்,7 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பதுளை மலையக சிறுவர் இல்லத்திற்கு 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.













# ட்ரம்பிடம் பிரதமர் மோடி அடிபணிந்துவிட்டார்

## ராகுல் மீண்டும் விமர்சனம்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம், பிரதமர் மோடி அடிபணிந்து விட்டார் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் விமர்சனம் செய்துள்ளார்.

ட்ரம்ப் கடந்த செவ்வாய்க்கிழமை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"சார்.. உங்களை பார்க்கலாமா?' என்று பிரதமர் மோடி என்னிடம் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு பேசினார். நானும் 'யெஸ்' என்றேன். அப்பாச்சி ரக ஹெலிகாப்டர்கள் விவகாரம் தொடர்பாக பேசினோம். பிரதமர் மோடியுடன் எனக்கு நல்ல நட்புறவு உள்ளது.

ஆனால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்தியா மீது அமெரிக்கா 50 வீத வரி விதித்தேன். இதனால் பிரதமர் மோடிக்கு என் மீது மகிழ்ச்சி இல்லை. இப்போது ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதை குறைத்துக் கொண்டுள்ளனர்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதைச் சுட்டிக் காட்டியும் தான் பேசிய பழைய காணொலி ஒன்றை வெளியிட்டும் ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில்,

"இந்தியா – பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போரின்போது, ட்ரம்ப்பிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தவுடன், பிரதமர் மோடி சரணடைந்துவிட்டார்.

கடந்த 1971 இல் பாகிஸ்தானுடனான போரின் போது, தனது போர்க் கப்பலை அனுப்பி இந்தியாவை அமெரிக்கா மிரட்டியது. எனினும் அமெரிக்காவின் அழுத்தத்துக்கு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அடிபணியவில்லை. இதுதான் இந்திரா காந்திக்கும் பிரதமர் மோடிக்கும் உள்ள வித்தியாசம்." என்று தெரிவித்துள்ளார்.

# தந்தைக்கு துரோகம் செய்த அன்புமணிக்கு தமிழ்நாடு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்

## ராமதாஸ் தெரிவிப்பு



தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்தக் கும்பலுக்கு வாக்குப் போடுவதா என்று மக்கள் அன்புமணிக்கு வாக்கு போடமாட்டார்கள் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது,

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று சொல்வார்கள். ஆனால் தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்த கும்பலுக்கா வாக்கு போடுவது என்று மக்கள் அன்புமணிக்கு வாக்கு போடமாட்டார்கள்.

பா.ம.க. நான் உருவாக்கிய கட்சி. இதற்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது. என்னிடம் இருந்து கட்சியைப் பறிப்பதற்கு சதித் திட்டம் தீட்டி சூழ்ச்சியோடு அன்புமணி செயல்படுவதை மக்கள் அறிவார்கள்.

அன்புமணி சிவில் நீதிமன்றத்துக்கு வேண்டுமானால் செல்லலாம். அன்புமணி கூட்டணி பேசுவது ஒரு கூத்து, நாடகம். என் தலைமையில்தான் கூட்டணி பற்றி பேச முடியும். நான் அமைப்பதே பாமக கூட்டணி. நான் சேரும் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். கட்சி என்னிடம் தான் உள்ளது. அன்புமணி பா.ம.கவில் இல்லை. பா.ம.கவின் நிறுவனர் மற்றும் தலைவர் பதவியை நானே எடுத்துக் கொண்டேன்.

நான் செய்த சத்தியத்தை மீறி அன்புமணியை மத்திய அமைச்சர் ஆக்கினேன். அன்புமணி எனக்கு வேட்டு வைப்பார் என்று எனக்கு முன்பே தெரியவில்லை. நான் ஆரம்பித்த கட்சியை உரிமை கொண்டாட யாருக்கும் தகுதியில்லை.

அன்புமணி செய்த தில்லுமுல்லு காரணமாகவே பாமகவில் இருந்து அவரை நீக்கினேன். ஒரு கோஷ்டியை வைத்துக்கொண்டு என்னை மோசமாக விமர்சித்தனர். தந்தைக்கு துரோகம் இழைத்த நபருக்கு யார் ஓட்டுப் போடுவார்கள். அன்புமணியின் கூட்டணி பேச்சுவார்த்தை நீதிமன்ற அவமதிப்பு. கூட்டணி விவகாரம் குறித்து இரண்டு நாள்களுக்குள் முடிவு தெரிவிக்கப்படும். அது தேசிய அளவிலான கூட்டணியாக இருக்கலாம், திராவிடமாக இருக்கலாம் அல்லது தமிழக கட்சியாக இருக்கலாம்." என்று தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க - பா.ம.க கூட்டணி நாம் எதிர்பார்த்த ஒன்றுதான்

## சீமான் கருத்து



அ.தி.மு.க. – பா.ம.க. கூட்டணி எதிர்பார்த்தது தான் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. – பா.ம.க. கூட்டணி எதிர்பார்த்தது தான். அவர்களுக்கு இது ஒன்றுதான் வாய்ப்பு. அ.தி.மு.க. கூட்டணியில் இணைவது மட்டுமே வாய்ப்பு உள்ளதால் அன்புமணி இணைந்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் பெப்ரவரி 21 ஆம் திகதி நடைபெறும் மாநாட்டில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்துவோம். தைப்பொங்கலாக இல்லாமல், தேர்தல் பொங்கலாக இருக்க வேண்டும் என்பதற்காக 3 ஆயிரம் ரூபாவை தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

அதேபோல அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் குறித்து புதிய அறிவிப்பு, மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி என இவை அனைத்தும் தேர்தல் நாடகம். வாக்குகளை குறிவைத்து இவற்றை அறிவிக்கிறார்கள்.

அதே சமயம் செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் போன்றவர்கள் நீண்ட நாள்களாக போராட்டம் நடத்தி வரும் நிலையில் அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை. தூய்மைப் பணியாளர்கள் சிறுபான்மையாக இருப்பதால், அவர்கள் குரல் எடுபடவில்லை.

திருப்பரங்குன்றம் வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ய தேவையில்லை. விளக்கேற்றும் உரிமை இருக்கிறதா இல்லையா? என்பதுதான் தற்போதைய பிரச்சினை.

சமூக நல்லிணக்கத்துக்கு பிரச்சினை வராமல் இருப்பதற்கு, இரு மதங்களின் பெரியவர்களையும் அழைத்து கோயில் வழிபாடு, தர்கா வழிபாடு குறித்து பேசி தீர்வு கண்டிருக்க வேண்டும்."– என்றார்.

# பிரித்தானியாவில் அமுலாகும் புதிய குடிவரவு சீர்திருத்தங்கள்



பிரித்தானியாவின் வேலை விசா பிரிவுகளுக்கான ஆங்கில மொழித் திறன் நிபந்தனைகள் அதிகாரபூர்வமாக இன்று முதல் உயர்த்தப்படுகின்றன.

2025ஆம் ஆண்டுக்கான பிரித்தானிய குடிவரவு வெள்ளை அறிக்கையில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாக, 2026 ஆம் ஆண்டில் இருந்து பிரித்தானியாவின் குடிவரவு விதிகளில் பல முக்கிய மாற்றங்கள் அமுலுக்கு வரவுள்ளதாக அதிகாரபூர்வ ஆவணங்கள் மற்றும் நாடாளுமன்ற விளக்கங்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு பகுதியாகவே, வேலை விசா பிரிவுகளுக்கான ஆங்கில மொழித் திறன் நிபந்தனைகள் உயர்த்தப்படுகின்றன.

பணியிட தொடர்பாடலும் சமூக ஒருங்கிணைப்பும் மேம்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# 5 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் வழங்குவதற்கு வெனிசுலா இணக்கம்

## ட்ரம்ப் தகவல்



வெனிசுலாவிடம் இருந்து 5 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் வழங்குவதற்கு வெனிசுலா அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைஎத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"வெனிசுலாவில் இருந்து 3 கோடி முதல் 5 கோடி வரை உயர் தரமான கச்சா எண்ணெய்யை வழங்க இடைக் கால அரசின் அதிகாரிகள் ஒப்புக்கொண் டுள்ளனர். இந்த கச்சா எண்ணெய் கொள்முதலை அவர்கள் சந்தை விலை யில் வழங்க முன்வந்துள்ளனர். அந்தப் பணம் அதிபராகிய என்னால் கட்டுப்படுத் தப்படும்.

குறிப்பாக, வெனிசுலா மற்றும் அமெ ரிக்க மக்களின் நலனுக்காகப் அந்த தொகை பயன்படுத்தப்படும். வெனி சுலாவில் இருந்து எண்ணெய் சேமிப்பு கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்டு நேரடியாக அமெரிக்காவில் உள்ள சரக்கு இறக்கும் தளங்களுக்கு கொண்டு வரப்படும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருள் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்காக வெனிசுலா ஜனாதி பதி நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்துள்ளது. அமெரிக்காவின் இந்த கைது நடவடிக்கையில் 24 வெனி சுலா பாதுகாப்பு அதிகாரிகள் கொல லப்பட்டதாக தகவல் வெளியான நிலை யில் இந்த அறிவிப்பு வெளியாகி உள் ளது.

வெனிசுலா தொடர்பாக எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் வெள்ளிக்கிழமை பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். இதில், எக் ஸான், செவ்ரான், கோனோகோ பிலிப்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க் கப்படுகிறது.




# கிரீன்லாந்தை வாங்கும் அமெரிக்கா: உறுதிப்படுத்திய வெள்ளை மாளிகை





டென்மார்க்கிற்குச் சொந்தமான தன்னாட்சி அதிகாரங்கொண்ட கிரீன்லாந்து தீவை வாங்குவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது தேசிய பாதுகாப்பு குழுவினர் தீவிர மாக ஆலோசித்து வருவதை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தி யுள்ளது.

"கிரீன்லாந்தை வாங்குவது குறித்து ஜனாதிபதி டிரம்ப் ஆலோ சித்து வருகிறார். ஆர்க்டிக் பிராந்தி யத்தில் ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்கு இது அமெ ரிக்காவிற்கு மிக அவசியமானது," என்று வெள்ளை மாளிகை ஊடக பேச்சா ளர் கரோலின் லெவிட் தெரிவித்துள் ளார்.

வெனிசுவேலாவில் சமீபத்தில் அமெ ரிக்கா மேற்கொண்ட இராணுவ நட வடிக்கையைத் தொடர்ந்து, கிரீன் லாந்தைப் பெறுவதற்கும் இராணுவ பலத்தைப் பயன்படுத்த வாய்ப்புள் ளதா என்ற கேள்விக்கு, "அனைத்து வாய்ப்புகளும் பரிசீலனையில் உள் ளன, ஆனால் ட்ரம்பின் முதல் தேர்வு பேச்சுவார்த்தை மட்டுமே" என்று லெவிட் பதிலளித்தார்.

நேட்டோ அமைப்பில் உறுப்பினராக இருக்கும் டென்மார்க்கின் ஒரு பகுதியை அமெரிக்கா ஆக்கிரமிக்க முயல்வது அல்லது வாங்குவது சர்வதேச விதி களை மீறும் செயல் என பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப் பிய நாடுகள் கூட்டாகக் கண்டனம் தெரிவித்துள்ளன.

வட அமெரிக்காவிற்கும் ஆர்க் டிக் பகுதிக்கும் இடையில் அமைந் துள்ளதால், ஏவுகணை தாக்குதல் களை முன்கூட்டியே கண்டறியும் பாது காப்பு மையமாக இது திகழ்கிறது.

அங்கு ஏற்கனவே அமெரிக்கா வின் பிட்டுஃபிக் விண்வெளி தளம் இயங்கி வருகிறது.

காலநிலை மாற்றத்தால் பனிக் கட்டிகள் உருகுவதால், அங்குள்ள அபூர்வ கனிமங்கள், யுரேனியம், இரும்பு மற்றும் எண்ணெய் வளங்களை எடுப்பது எளிதாகியுள்ளது.

ஜனாதிபதி ட்ரம்பின் இந்த அதிர டித் திட்டம் தொடர்பாக அடுத்த வாரம் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, டென்மார்க் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

வியாழக்கிழமை 08/01/2026

**கனடாவில் விபத்தில் இந்திய மாணவன் பலி**



C3▶









# டொரோண்டோவில் கடும் பனிப்பொழிவு: போக்குவரத்து பாதிப்பு; பஸ் சேவை ரத்து

டொரோண்டோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல மணிநேரம் நீடித்த உறைபனி மழையைத் தொடர்ந்து, தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்படும் என கனடா சுற்றுச்சூழல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில பகுதிகளில் ஒரு மணித்தியாலத்திற்கு 2 முதல் 5 சென்ரி மீற்றர் வரை பனி பொழியக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் வீதித் தோற்றப்பாடு வெகுவாகக் குறையக்கூடும்.

C2▶

# கனடாவில் இந்த ஆண்டில் வழங்கப்படும் வரிச் சலுகை



கனடாவில் 2025 ஆண்டிலிருந்து புதிய நடுத்தர வர்க்க வரி குறைப்பு நடைமுறைக்கு வருகிறது.

கடந்த ஜுன் மாத இறுதியில் அறிவிக்கப்பட்ட இந்த மாற்றத்தின் கீழ், ஆண்டுக்கு 57,375 டொலர் அல்லது அதற்கு குறைவாக வருமானம் பெறுவோருக்கான தனிநபர் வருமான வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

2025 வரி ஆண்டிற்கு குறைந்த வருமான வரி விகிதம் 14.5 சதவீதமாகவும் 2026 மற்றும் அதற்குப் பிந்தைய ஆண்டுகளுக்கு 14 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த வரி விகிதம் 15 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மத்திய அரசின் கணிப்பின்படி, இந்த வரி குறைப்பு நடவடிக்கையால் சுமார் 2.2 கோடி கனடியர்கள் பயனடைவார்கள்.

C2▶



# கனடாவின் எண்ணெய் விலை வீழ்ச்சி வலுசக்தித் துறையில் ஏற்படும் மாற்றம்

கனடாவின் வலுசக்தி துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டு வருவதாகவும், குறிப்பாக நாட்டின் எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளதாகவும் பொருளாதார நிபுணர் அமண்டா லேங் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் நிகழப்போகும் ஒரு விடயமாக கருதப்பட்ட இந்த விலை வீழ்ச்சி, தற்போது ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது என அவர் வலியுறுத்தினார்.

அண்மையில் வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டு எண்ணெய் சந்தையை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பது உலகளாவிய சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெனிசுவேலாவின் எண்ணெய் உற்பத்தி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பினால், அது உலகச் சந்தையில் அதிகப்படியான விநியோகத்தை உருவாக்கி விலைகளை மேலும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் இந்த நகர்வு கனடாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு துறைக்கு கடும் போட்டியை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

எண்ணெய் விலை வீழ்ச்சி வாகன சாரதிகளுக்கு எரிபொருள் விலையில் ஓரளவு நிவாரணம் அளிக்கக்கூடும் என்றாலும், இது கனடாவின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில், குறிப்பாக அல்பேர்ட்டா போன்ற வலுசக்தி உற்பத்தியை நம்பியிருக்கும் மாகாணங்களின் வருவாயில் பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

## டொரோண்டோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகள் மற்றும் நடைபாதைகள் பனியினால் மூடப்பட்டிருப்பதால், வாகனங்களைச் செலுத்தும் போது விளக்குகளை ஒளிரச் செய்யுமாறும், வேகத்தைக் குறைத்து பாதுகாப்பான இடைவெளியைப் பேணுமாறும் ஒன்டாரியோ மாகாண பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக யோர்க் மற்றும் ஹால்டன் பிராந்தியங்களில் பாடசாலை பஸ் சேவைகள் மற்றும் ஏனைய போக்குவரத்து சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

எனினும் பாடசாலைகள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வான் மற்றும் மார்க்கம் போன்ற நகரங்களில் வீதிகளில் உள்ள பனிக்கட்டிகளை அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பனி மற்றும் ஐஸ் படிவுகள் காரணமாக வீதிகளைச் சுத்தம் செய்ய சாதாரண நேரத்தை விட அதிக காலம் எடுக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் குளிரால் பாதிக்கப்படுபவர்களுக்காக டொரோண்டோ மாநகர சபையினால் 5 வெப்பமூட்டும் மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் வழுக்கும் தன்மையுடன் காணப்படுவதால், அவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.





## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம், ஒருவருக்கு அதிகபட்சமாக 420 டொலர் வரை, இருவர் வருமானம் பெறும் குடும்பத்திற்கு 840 டாலர் வரை வரிச் சேமிப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை, வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து வரும் சூழலில், நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட கனடியர்களின் பொருளாதார சுமையை ஓரளவு குறைக்கும் என அரசு தெரிவித்துள்ளது.

# சீனாவிற்கு விஜயம் செய்கிறார் கனடியப் பிரதமர் மார்க் கார்னி



அடுத்த வாரம் சீனாவிற்கு அதிகாரபூர்வ பயணம் மேற்கொள்ள உள்ளார் என பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனவரி 13 முதல் 17 வரை நடைபெறவுள்ள இந்தப் பயணம், வர்த்தகம், எரிசக்தி, விவசாயம் மற்றும் சர்வதேச பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒட்டாவா – பெய்ஜிங் இடையிலான ஒத்துழைப்பை மேலும் உயர்த்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணம், 2017ஆம் ஆண்டுக்குப் பிறகு சீனாவிற்கு செல்லும் கனடா பிரதமரின் முதல் அதிகாரப்பூர்வ பயணம் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவிற்கும் சீனாவிற்கும் இடையில் கடந்த காலங்களில் சில முரண்பாட்டு நிலைமைகள் நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் சீனாவை கனடா விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் விபத்தில் இந்திய மாணவன் பலி



இந்திய இளைஞர் ஒருவர் கனடாவில் வீதி விபத்தொன்றில் பலியான சம்பவம் அவரது குடும்பத்தினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி, இரவு 10.30 மணியளவில், தன் நண்பர் ஒருவருடன் கனடாவின் மொன்றியலிலிருந்து ரொரன்றோ நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த அர்மான் என்னும் இந்திய இளைஞரே விபத்தில் பலியாகியுள்ளார்.

விபத்து நடந்தபோது, அர்மான் நடந்து சென்றுகொண்டிருந்ததாக கூறப்படும் நிலையில், அந்த விபத்து எப்படி நடந்தது என்பது குறித்த விபரம் தெரியவில்லை.

அர்மான் தன் பெற்றோருக்கு ஒரே மகன் ஆவார். தங்கள் பிள்ளை கனடாவுக்கு கல்வி கற்கச் சென்ற நிலையில், திடீரென அவரது மரணச் செய்தி கிடைத்ததால் கடும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர் அவரது பெற்றோர்.

அர்மானின் உடலை இந்தியா கொண்டு வர அவரது பெற்றோர் திணறிக்கொண்டிருக்கும் நிலையில், தங்கள் பிள்ளையின் மரணம் குறித்து முழுமையான விசாரணை கோரியுள்ளார்கள் அவர்கள்.